**ஊடக வெளியீடு**

**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**

# பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை - 2026

## அனுமதி அட்டைகளைத் தரவிறக்கம் செய்தலும்

## அனுமதி அட்டையில் திருத்தம் செய்தலும்

மேற்குறித்த பரீட்சை 2026.10.24 ஆம் திகதி 1520 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இப் பரீட்சையின் அனுமதி அட்டைகள் உரிய பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பாடசாலை நிர்வாகிகளுக்கும் 2026.10.15 ஆம் திகதி தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சகல அனுமதி அட்டைகளையும் 2026.10.16 ஆம் திகதி தொடக்கம் தரவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

**அரச பாடசாலைகள் :-** அனுமதி அட்டைகளில் திருத்தங்களை மேற்கொள்ள பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குப் பிரவேசித்து, அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர், கடவுச்சொல் (User name & Password) என்பவற்றைப் பயன்படுத்தி உங்கள் கணக்கிற்குள் நுழைந்து உரிய அனுமதி அட்டைகளிலுள்ள திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும்.

**தனிப்பட்ட பாடசாலைகள் :-** அனுமதி அட்டைகளில் திருத்தங்களை மேற்கொள்ள பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குப் பிரவேசித்து, Private School ஐ Click செய்து பாடசாலை நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர், கடவுச்சொல் (User name & Password) என்பவற்றைப் பயன்படுத்தி அனுமதி அட்டைகளிலுள்ள திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெயர் மற்றும் மொழிமூலங்களில் உள்ள திருத்தங்களை இணையத்தளத்தினூடாக மேற்கொள்ள முடியுமென்பதுடன் திருத்தங்களை மேற்கொள்ளல் 2026.10.19 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் இடைநிறுத்தப்படும். திருத்தங்களுக்கான நாட்கள் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது.

இப்பரீட்சை தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் இலங்கை பரீட்சைத் திணைக்களத்துடன் பின்வரும் முறைகளில் தொடர்பு கொள்ள முடியுமென்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| நேரடித் தொலைபேசி எண் | : 1911 |
| தொலைபேசி எண்கள் | : 011-2784208, 011-2784537 |
| தொலைநகல் எண்கள் | : 011-2784422 |
| மின்னஞ்சல் முகவரி | : gceolexamsl@gmail.com |

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்

இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை, பத்தரமுல்ல
2026.10. 14